# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 126/2019

சாட்சி : PW– 1
பெயர் : திருமதி. பூவி                                        தேதி : 18.09.2024

**குறுக்குவிசாரணை** :– (13 வது பிரதிவாதி தரப்பில்)

தாவா சொத்துக்களை 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் கிரயம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரியல்ல. பூர்வீக சொத்துக்கள். வா.சா.ஆ.–2 பாகப்பிரிவினை பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. அதில் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் கிரயம் பெற்ற பல சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது என்று கண்டள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் பெயரில் தனித்தனியான பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.–4 பட்டா யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண், மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. சந்திரன் என்பவர் ஆனைகவுண்டர் மற்றும் அவர்களுடைய வாரிசுகளிடம் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.–3 கிரயப் பத்திரத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. சந்திரன் (13 வது பிரதிவாதி) ச.எண் 203/6 Bல் 25 சென்ட் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அதில் 13 வது பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வீடு கட்டி உள்ளார். குடியிருக்கவில்லை. 13ம் பிரதிவாதி உரிய வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ச.எண். 203/6Bல் 1.74 ½ ஏக்கர் நிலத்தில் 25 சென்ட் நிலம் 13ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதில் எனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.–3 சட்டப்படி செல்லக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. 7ம் பிரதிவாதி என் அம்மாவின் தங்கை. என்னுடைய சின்னம்மா. அவர் இதே

நீதிமன்றத்தில் அ.வ.எண். 400/2018 என்ற பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து, அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் 9ம் பிரதிவாதி என்றால் ஆமாம். அந்த வழக்கு தரப்பினர்கள் பைசல் செய்துகொண்டதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

( 1 முதல் 5, 7 மற்றும் 14ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது )

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.